மாறி, மற்றவர் தானே திருப்பி அடித்துவிடுவது என்ற மனப்பான்மை இருக்கும்வரை நாட்டிலே ஒழுங்கான அரசாங்கம் எப்படி இருக்குமென்று கேட்கிறேன்.

"முன்னுலேயே சர்க்கார் ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று நண்பர்கள் கேட்கிருர்கள்." 1957-ம் வருஷத்திலே, நாகரீகம் முதிர்ந்த இந்த நாட்டு மக்கள் சிறிது தவறு செய்தாலுங்கூட, பின்னுல் தாங்களே தெரிந்துகொள்வார்கள், அவர்களிடம் நாம் போய் ஏதாவது செய்தாலும் அவர்கள் மனது சங்கடப்படும், தாமாகவே திருந்திக்கொள்ள சந்தர்ப்பம் கொடுத்த கனம் முதல் அமைச்சர் அவர்களை நாம் பாராட்டவேண்டுமே யொழிய, அவர்களே ஏன் நடவடிக்கை எடுக்கவில்லை என்று கேட்பது பைத்தியக்காரத்தனமாகத் தோன்றுகிறது. அவர்கள் வந்திருந்த காலத்தில் இதையே நான் சொன்னேன். இப்பொழுது அவர், "மக்கள் திருந்திவிடுவார்கள், மக்களிடையே பிரவேசித்து அனுவசியமாக கசப்பு உண்டாக்கவேண்டாம். இந்தக் காலத்திலும் மக்கள் மூர்க்கத்தனமாக நடந்துகொள்வார்கள் என்ருல் நம் நாட்டுக்கு என்றைக்குத்தான் விமோசனம் கிடைக்கப்போகிறதோ" என்று மிக நல்ல முறையிலே முதல் அமைச்சர் அவர்கள் சொன்னுர்கள். அமைச்சர்களும் அங்கே சுற்றுப் பிரயாணம் செய்து நடவடிக்கை எடுத்தது மிகப் பொருத்தம். ஆனுல், சர்க்கார் நடவடிக்கை எடுத்து ஒன்றுக்கொன்று செய்தார் என்று சொல்வதற்கு எந்தவிதமான காரணமும் இல்லை.

நாடார்கள் இருந்த முதுகுளத்தூரில் ஏதாவது நடந்தது என்று சொல்வதற்கு ஒன்றும் இல்லை. முதுகுளத்தூரில் தாக்கவில்லை. தனிப்பட்ட சக்தியற்ற நாடார் எத்தனையோபேர் இருந்தும்கூட அங்கே ஒன்றும் நடக்கவில்லை. ஆனுல், இங்கே ஏன் நடக்கவேண்டுமென்பது நாம் ஆராய்வதற்குரிய விஷயம்.

எமானுவேல் கொலையானபிறகு, இரண்டொரு கொலை நடந்ததைக் காரணமாக வைத்துக்கொண்டு, ஹரிஜன மக்கள் எங்கிருந்தாலுங்கூட, அவர்களிடையே பயத்தை உண்டாக்கி, கோஷ்டி கோஷ்டியாகச் சேர்ந்து கொண்டு, கண்ட இடத்தில் எல்லாம் தீ வைத்தார்கள். அதிலே ஒன்றைப் போற்றவேண்டும். என்னவென்ருல், மறவர்களானுலும், யாரையும் கொல்லவில்லை. ஹரிஜனங்கள் நிலைமையை எதிர்த்து நிற்கவில்லை. எங்காவது ஒரு ஹரிஜனன் எதிர்த்து நின்றிருந்தால், தீ போல் எல்லா ஊர்களிலும் எதிர்ப்பு ஏற்பட்டு இன்றைக்கு நாம் நம்பமுடியாத பயங்கரமான காரியம் நடந்திருக்கும். ஆகவே, சர்க்கார் நிதானமாக எடுத்துக் கொண்ட நடவடிக்கை மிகவும் நியாயமானது. அதற்காக சர்க்காரைப் பாராட்டக் கடமைப்பட்டிருக்கிருேம். அவர்கள் எடுத்துக்கொண்ட நடவடிக்கைக்கு நாம் நன்றி செலுத்தி, அவர்கள் எடுத்துக்கொண்ட முயற்சிகளையெல்லாம் இந்தச் சபை ஆதரிக்கிறது என்று நாம் தீர்மானிக்க வேண்டுமென்று கனம் அங்கத்தினர்கள் அத்தனை பேரையும் நான் கேட்டுக்கொள்ளுகின்றேன்.

DEPUTY SPEAKER : சபை 1957-ம் வருஷம் அக்டோபர்ஸ்ரீ 30உ காலை 9 வரையில் ஒத்திவைக்கப்பட்டது.

The House then adjourned.

IV.—PAPER LAID ON THE TABLE OF THE HOUSE.

16. *Report of the Legislative Committee on White Paper on Education, Madras State*, 1956.